# <u>அருப்புக்கோட்டை நகராட்சி</u>

**விளம்பி ஆண்டு மாசி மாதம் நாள் : 08.03.2019 வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திருமதி.ரா.ஜெகதீஸ்வரி**

**தனி அலுவலர்**

**பொருள் 1 :** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் 07.03.2019ம் தேதிய ந.க.எண்.50977/2018/டிபி3, சுற்றறிக்கையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண் 23ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிக்குள் கட்டிட விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு தொழில் சார்ந்தவல்லுநர்கள் நியமனம் செய்ய நடைமுறையில் பரிசோதனைக்குழுவில் (Screning Committee) 1. நகராட்சி ஆணையாளர் 2.நகராட்சி பொறியாளர் 3. நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்திரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்கண்ட 3 உறுப்பினர்கள் கொண்ட பரிசோதனைக்குழு அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டும் பரிசோதனைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1705/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.659</u>**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்கைக்குள் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் அதனை சார்ந்த பிற கட்டமைப்புகளுக்கும் கட்டட உரிமம் வழங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண் .1892, நாள் 13.01.2015 மற்றும் நகர்மன்ற தீர்மான எண் 2027, நாள் 27.03.015ன்படி 01.006.2015 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட உரிம கட்டணங்கள் தற்போதும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி 4 வருட காலமாக உயர்த்தப்படாமல் அதே கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை நிலை எண் –18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்( MAI) துறை நாள் 04.02.2019 தமிழ்நாடு அரசிதழ் எண்.43 நாள் 04.02.2019 ஆகியவற்றில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் , அலுவலகம் சென்னை ந.க.எண் 31159/2018/டிபி3, நாள் 05.03.2019 தேதிய சுற்றறிக்கை கடிதத்தில் . பத்தி 5ல் , மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகைசெய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றிமைத்து விதிகளின்படி கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவே 08.03.019க்குள் மன்ற ஒப்புதல் பெற்று பிரசுர நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே 1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 5–வது சட்டத்தின் பிரிவுகள் 175,176,173,197,199,200,201,204,207,208,249,250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள், உரிம ஆணைகள் அனுமதிகள் மீதான கட்டணங்களின் மாறுதல்கள், இந்நகராட்சியின் நிதி நிலையை அதிகரிக்கும் பொருட்டு.

எற்கனவே நிலையில் உள்ள கட்டண விகிதத்தில் தேவையான திருத்தங்கள் செய்து திருத்திய கட்டணம மற்றம் உரிம கால விவரங்கள் குறிப்பிட்டு கீழ்கண்டவாறு திருத்தியமைக்க மன்ற அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 – | கட்டிட உரிமங்களின் விவரங்கள் | தற்போது நகராட்சியில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் கட்டண விவரம் | | | திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமங்களின் கட்டண விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | தொகை ரூ. | அளவு | காலம் | தொகை ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 175,176 ,177 | 1.தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைளாகவும் பிரித்து அஙகீகாரம் பெற அனுமதி கட்டணம்(குடியிருப் பிற்கு) | | | | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 5000,00 |
| | | 2.தனியார் நிலத்தை தெருகளாகவும் வீட்டு மனைகளாவும் பிரித்து அஙகீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பு அல்லாத இனஙகளுக்கு) | | | | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 10,000,00 |
| 2 | 197(1)(அ) | 1.மனை அஙகீகாரம் வழஙக (குடியிருப்பு மனை) | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 140 | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 300,00 |
| | | | 300 சதுர மீட்டருக்கு மேல் | – | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 600,00 |
| | | 2.மனை அஙகீகாரம் வழஙக (குடியிருப்பு அல்லாத மனை) | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 320 | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 550,00 |
| | | | 300 சதுர மீட்டருக்கு மேல் | – | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 800,00 |
| 3 | 197(1) 175 முதல் 177 | (அ) அஙகீகரிக்கப்பட்ட மனை பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனை ஒருஙகிணைப்பு அஙகீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம் | – | – | – | ஒவ்வொரு மனைக்கும் | ஒரு முறை | 1000,00 |
| | | (ஆ) அ,ஙகீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் நில உபயோக மாற்றம் செய்து அஙகீகாரம் பெறுவதறகும் அஙகீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதியில் மற்றும் அஙகீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நில உபயோகமாற்றம்செ | – | – | – | ஒருமுறை | ஒரு முறை | 20000,00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சய்து அஙகீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம். | | | | | | |
| 4 | 197,201 ,215 | 1.மட்டப்பாபட்டிடம் கான்கீரிட் கூடிரை கட்டிடம்,பிணியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல், கூடுதல் கட்டிடம் கட்டுதல் மாறுதல் செய்தல் (கட்டுமானம் ஒருபகுதி ஒரு பகுதி ஆஸ்பஸ்டாஸ் தகடு) தகவல் கட்டடமாகவும் ஒருபகுதி மட்டப்பா கான்கிரீட் கூரை கட்டிடமாகவும் இருப்பின் முழுமட்டப்பா கட்டத்திற்குரிய கட்டண விகிதஙகள் அனுசரிக்கப்பட்ட வேண்டும் | | | | | | |
| **குடியிருப்பு கட்டிடஙகளுக்கு** | | | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரை தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 150 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 250,00 |
| | | (ஆ) முதல் தள கட்டிடம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 200 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 350,00 |
| | | (இ)இரண்டாம் தளகட்டிடம் அதற்கு மேல ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 290 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 500,00 |
| **குடியிருப்பு அல்லாத கட்டிடஙகளுக்கு** | | | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரை தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 190 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 400,00 |
| | | (ஆ) முதல் தள | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 250 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 500,00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (இ)இரண்டாம் தளகட்டிடம் அதற்கு மேல ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பக்கத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 375 | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | 700,00 |
| 5 | | கட்டிட உரிமம் முடிவடையும் காலத்திற்கு முன்னர் கட்டிட உரிமத்தை அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் புதுப்பிக்கவேண்டும். | கட்டிடப்பணி துவஙகப்பட்டிருக்க கூடாது | – | – | ஒருமுறை மட்டும் | மூன்றாண்டு காலத்திற்கு | கட்டண அனுமதி கட்டணத்தில் 100சதவீதம் |
| 6 | 197 | (அ) பழைய கட்டிடஙகளை இடித்து அகற்றுவதற்கு | – | – | – | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | ஒருமுறை | 75,00 |
| | | (ஆ) தெரு ஓரஙகளில் போக்குவதத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிட கட்டுமான பொருட்கள் சேமித்து வைப்பதற்கு | | மூன்று ஆண்டு காலத்திற்கு | 190/10 சமீ | | ஐந்து ஆண்டு காலத்திற்கும் | கட்டிட அனுமதி கட்டணத் தொகையில் 75 சதவீதம் |
| 7 | 183(2) | (அ) வேணல் பந்தல் அமைக்க | | | | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | மார்ச் முதல் ஜீன் முடிய | 200,00 |
| | (ஆ) | (ஆ)யாதொரு பொது தெருவிலே வேறு எந்த பொ இடத்திலோ திருமணப்பந்தல் போன்ற தற்காலிக பந்தல் அமைக்க | | | | ஒவ்வொரு 10 சதுரமீட்டக்கும் அதன் பாகத்திற்கும் | 7 நாட்கள் | 200,00 |
| | | (இ) கோயில் உற்சவம் மத சம்மந்தமான வைபஙகள் நடக்கும் காலஙகளில் தற்காலிக பந்தல் அமைக்க | – | – | இலவசம் | – | – | இலவசம் |
| 8 | 197 மற்றும் 207 | (அ) பொதுமக்கள் கூடும் சர்க்கஸ், சினிமா, நாடகம், கேளிக்கைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க அனுமதி வழஙக ( எளிதில் தீப்பிடிக்காத | ஒருமுறை | ஒவ்வொரு இடம் | 25000,00 | ஒருமுறை | ஒவ்வொரு இடம் | 25000,00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொருட்களினால்) | | | | | | |
| 9 | 197,201 ,215 | 1.கழிப்பறை கட்ட | ஒவ்வொன் னுக்கும் | மூன்று ஆண் டு காலத் திற்கு | 140,00 | ஒவ்பொன் னுக்கும் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 250,00 |
| | | 2.குளியலறை கட்ட | ஒவ்வொன் னுக்கும் | மூன்று ஆண் டு காலத் திற்கு | 140,00 | ஒவ்பொன் னுக்கும் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 250,00 |
| | | 3.குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்ட | ஒவ்வொன் னுக்கும் | மூன்று ஆண் டு காலத் திற்கு | – | ஒவ்பொன் னுக்கும் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 400,00 |
| | | 4.நச்சுத்தடை தொட்டி கட்ட (செப்டிக் டேங்க்) | ஒவ்வொன் னுக்கும் | மூன்று ஆண் டு காலத் திற்கு | 140,00 | ஒவ்பொன் னுக்கும் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 250,00 |
| | | 5,சுற்றுச்சுவர் 1,50மீட்டர் உயரத்திற்குமேல் கட்டுவதற்கு | – | மூன்று ஆண் டு காலத் திற்கு | – | ஒவ்வொரு 10 சதுரமீட்டக் கும் அதன் பாகத்திற்கு ம் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 200,00 |
| | | 6.மாடிப்பபை அமைக்க | ஒவ்வொரு தளத்திற்கு ம் | மூன்று ஆண் டு காலத் திற்கு | 140 | ஒவ்லொரு தளத்திற்கு ம் | ஐந்து ஆண் டு காலத் திற்கு | 250,00 |
| 10 | 204 மற்றும் 213 | 1கட்டிட அனுமதி வரைபடம் உண்மை நகல் வழஙக | ஒவ்வொன் னுக்கும் | ஒருமு றை | 150 | ஒவ்பொன் னுக்கும் | ஒருமு றை | 200,00 |
| | | (2) கட்டிட அனுமதி உத்தரவு உண்மை நகல் வழஙக | ஒவ்வொன் னுக்கும் | ஒருமு றை | 150 | ஒவ்பொன் னுக்கும் | ஒருமு றை | 200,00 |
| | | 3.மனைப்பிரிவு அனுமதி வரைபடம் , முழுமைத்திட்ட வரைபடம்விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடம்ந கல் வழஙகுவதற்கு | – | – | . | ஒவ்பொன் னுக்கும் | ஒருமு றை | 1000,00 |
| | | 4.நகர வரைபட நகல் வழஙக | – | – | . | ஒவ்பொன் னுக்கும் | ஒருமு றை | 500,00 எ2 அளவு, 400,00 எ3 அளவு |
| | | 5,நில உபயோக சான்று வழஙக | – | – | . | ஒவ்பொன் னுக்கும் | ஒருமு றை | 1000,00 |
| | | 6.நகரளவை புலப்பட நகல் வழஙகுவதற்கு | ஒருபுல எண் பகுதிகாட் டும் வரை படத்திற்கு | ஒருமு றை | 56 | ஒருபுல எண்காட்டு ம் வரைபடத்தி ற்கு | ஒருமு றை | 200,00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7,நகரளவை நிலபதிவேடு நகல் வழஙக | ஒருபுல எண்ணிற்கு | ஒருமுறை | 56 | ஒருமுறை | ஒருமுறை | 200,00 |
| | | 8.நகரநில அளவை எல்லைகள் அளந்து காண்பிக்க (நான்குமால் அளவீடு செய்ய) | ஒவ்வொரு புல எண்ணிற்கும் | ஒருமுறை | 100 | ஒவ்வொரு புல எண்ணிற்கும் | ஒருமுறை | 500,00 |
| 11 | 186 | பதிவுபெற்ற தொழில் வல்லுநர் Registered fr»essionals0 அனுமதி வழஙக மற்றும் புதுப்பிக்க | ஒருவருக்கு | ஒரு ஆண்டிற்கு | 500 | ஒவ்வெருக்கு | ஐந்து ஆண்டிற்கு | 5000,00 |
| | | 2.பதிவு பெற்ற தொழில் வல்லூா் (Regitered Áofssionals) அனுமதி வழஙகுவதற்கு முன் வைப்புத் தொகை | ஒருமுறை | – | 3000 | ஒருமுறை | – | 5000,00 |
| | | 3.தொலைதொடா்பு கோப்புரஙகளுக்கு அனுமதி வழஙகுதல் | – | – | – | இனம் ஒன்றிற்கு | ஒருமுறை | 5000,00 |
| | | 4.முன் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடஙகளுக்கு | ஒருமுறை | | உரிமையான தொகையில் 50 சதவீதம் கூடதலாக செலுத்தவேண்டும் | ஒருமுறை | – | உரிமையாண தொகையில் 50 சதவீதம் கூடதலாக செலுத்தவேண்டும் |
| 12 | | மழைநீா் சேகரிப்ப கட்டணம் அமைக்க வைப்புத்தொகை (கட்டமைப்பு அமைக்கப்பட்ட விவரத்தினை அலுவலகத்தில் சமா்ப்பித்தபின் வைப்புத்தொகை திரும்ப வழஙகப்படும் | – | – | – | ஒருமுறை | – | 3000,00 |
| 13 | | கட்டிட மேல்முறையீடு செய்ய | – | – | – | இனம் ஒன்றிற்கு ஒருமுறை | ஒருமுறை | 1000,00 |
| 14 | 207,197,முதல் 199 வரை | 1)கிணறு வெட்ட அனுமதி அளித்தல் இட அமைப்பு ஒப்புதலுக்கு | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒருமுறை | – | 125 | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒருமுறை | 5 ஆண்டுகள் | 300,00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2)கிணறுவெட்ட அல்லது புதுப்பித்து வெட்ட அனுமதி அளித்தல் (குழாய் கிணறு தோண்டுதல் இதில் அடங்கும் (Well ) or (Borewell) | ஒவ்வொரு கிணற்றுக் கும் ஒருமுறை | | | ஒவ்வொரு கிணற்றுக் கும் ஒருமுறை | 5 ஆண் டுகள் | 300,00 |
| 15 | | )பொதுத்தெருக்களி லும் நகராட்சி ஆளகையிலுள்ள பொது இடங்களிலும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | – | – | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | நிதி ஆண் டு | 100,00 |
| 16 | | அ)வீட்டு விழாக்களிலும், வியாபார நோக்கு இல்லாத இதர விழக்களிலும் பந்தல் போடுவதற்கு | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | நான் ஒன்று க்கு | 50 | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | நாள் ஒன்று க்கு | 100,00 |
| | | ஆ) வியாபார நோக்குடன் கூடிய ஆக்கிரமிப்புகள் | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | நான் ஒன்று க்கு | 50 | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | நாள் ஒன்று க்கு | 100,00 |
| 17 | | சினிமா சூட்டிங எடுக்க | நகராட்சி சாலைகள் தெருக்கள் பொது இடஙகள், அரசு இடஙகள் | நான் ஒன்று க்கு | – | – | நாள் ஒன்று க்கு | 3000,00 |
| 18 | | விளம்பர சூட்டிங சின்னத்திரை சூட்டிங எடுக்க | நகராட்சி சாலைகள் தெருக்கள் பொது இடஙகள், அரசு இடஙகள் | நான் ஒன்று க்கு | – | – | நாள் ஒன்று க்கு | 1500,00 |
| 19 | | திருத்தக்க.டுமானம் (அதே நிலையில்) கூரை மாற்றம் செய்ய சில்லறை வேலைகள் செய்ய | 10 சதுரமீட்டரு க்கு அதற் பாகத்திற்கு ம | ஒருமு றை | 250,00 | 10 சமீட்டர் அதன் பாகத்திற்கு ம் | ஒருமு றை | 300,00 |

மேற்படி திருத்திய கட்டணம் விகிதஙகளை விருதுநகர் மாவட்ட அரசிதழ் மற்றும் பிரசுரம் செய்ய ஆகும் செலவு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மன்றம் அஙகீகரிக்கலாம்
2. செலவுத்தொகைக்கு அனுமதி வழஙகலாம் ந.க.எண்.6495/2008/எப்1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.660</u>**

**பொருள் 3 :** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிடவிதிகள் 2019ன்படி நகராட்சிப் பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண் 30(1)ல் குறிப்பிட்டுள்ளபடி தொடர் கட்டுமான பகுதியாக (Continous Building Areas) அறிவிப்பு செய்வதற்கு நகர்மன்றத்தின் ஒப்புதலுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் அரசுக்கு பிரேரணைகள் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் நகரளவை எண்களில் அமைந்துள்ள பகுதியினை தொடர் கட்டுமான பகுதியாக அறிவித்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 1705/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.661</u>**

**பொருள் 4 :** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிடவிதிகள் 2019–ன்படி நகராட்சிப் பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண் 30(2)–ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பகுதிகளில் உள்ள பொருளாதார நலிவடைந்தோர் பகுதியினை (Economically Weaker section areas) நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று பிரசுரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதியில் உள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விரிவு அபிவிருத்தி திட்டங்களில் திட்டம் எண்.1

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

ஏழைகள் வசிக்கும் பகுதிகளாக குறிப்பிட்டுள்ள பகுதிகள் மற்றும் குடிசைமாற்று வாரியத்தால் அறிவிக்கப்பட்ட குடிசை பகுதிகளில் உள்ள நகரளவை எண்கள்

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.1705/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.662</u>**

**பொருள் 5 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி 207 அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாகம் எண் 51 முதல் 130 வரையிலான மொத்தம் உள்ள 80 பாகஙகளுக்கு 2018 மற்றும் 2019க்கான நடைபெற்ற சிறப்பு சுறுக்க திருத்தம் மற்றும் சிறப்பு முகாம் மூலம் வரப்பெற்ற படிவஙகள் 6, 7, 8, 8a ஆகிய படிவஙகள் தனியார் நிறுவனம் மூலம் கணினியில் பதிவேற்றம் செய்திடவும் மற்றும் படிவஙகளில் உள்ள போட்டோக்கள் மற்றும் இணைப்புக்கள் Scan செய்திடவும் மற்றும் (படிவம் 7) ஜெராக்ஸ் எடுத்திடவும் தேவையான செலவுத்தொகை ரூ.30,000/– வரை செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7206/2018/சி3

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.663</u>**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 1ஐ ஏலம் எடுத்து நடத்தி வந்த திரு.மணிகண்டன் என்பவர் கடையை நடத்த இயலாத காரணத்தினால் 25.09.2018 அன்று நகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்தார். மேற்படி கடை பொது ஏலம் விடப்பட்டு 01.02.2019 முதல் திரு.ஆத்திமுத்து என்பவருக்கு புதிதாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைக்கான முன்வைப்புத்தொகை ரூ.50000/–ல் அக்டோபர் 2018 முதல் ஜனவரி 2019 வரை உள்ள வாடகைத் தொகை ரூ.8792ஐ கழித்தது போக மீதத் தொகை ரூ.41208/– ஐ திரு.மணிகண்டன் என்பவருக்கு திரும்ப வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5138/2012/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.664**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் உள்ள சிஎஸ்ஐ பள்ளி, தஷ்ணாமூர்த்தி கோவில், நெசவாளர் காலனி, பாம்பாலம்மன் கோவில், சித்தவைத்தியசாலை ஆகிய அஙகன்வாடிமையஙகளில் குடிநீர்வசதி ஏற்படுத்த ஒருஙகிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு அஙகன்வாடி மையத்திற்கும் ரூ.10000/– வீதம் 5 அஙகன்வாடி மையஙகளுக்கு ரூ.50000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்கள் நிர்வாக அனுமதி வழஙகியதை இந்நகர்மன்றத் தீர்மான எண்.648, நாள்.20.02.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 08.03.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.26% மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 1.14% மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.26% குறைவாக கொடுத்துள்ள திருமதி.R.பஞ்சவர்ணம், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.880/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.665**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் ஒருஙகிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள், மாண்புமிகு தமிழக சட்டசபையில் விதி எண் 110ன் கீழ் தமிழகத்தில் உள்ள 860 அஙகன்வாடி மையஙகளை தரம் உயர்த்த மற்றும் பழுது பார்க்க 2018–19ம் ஆண்டில் அனுமதி வழஙகி ஆணையிடப்பட்டது. அதன்படி விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை நகராட்சியில் மேலரத வீதியில் உள்ள அஙகன்வாடி மைய பழுதுபணிகளுக்கு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்கள் நிர்வாக அனுமதி வழஙகியதை இந்நகர்மன்றத் தீர்மான எண்.647, நாள்.20.02.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 08.03.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.03% மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 3.05% மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.03% குறைவாக கொடுத்துள்ள திருமதி.R.பஞ்சவர்ணம், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண்.1162/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.666**

**பொருள் 9 :** அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள் 03.07.2007ன் படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட அட்டவணை வரிசை எண் 1 முதல் 33 வரை உள்ள கடைகளுக்கு 31.03.2019 உடன் மூன்றாண்டு காலம் முடிவடைகிறது. வரிசை எண் 34 முதல் 36 வரை உள்ள கடைகளுக்கு 31.05.2019 உடன் மூன்றாண்டு காலம் முடிவடைவதால் ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூனறாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | குத்தகை தாரா் பெயா் | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயா்வு செய்யப்பட வேண்டிய தொகை (15சதவீதம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| புதிய பேருந்து நிலையம் | | | | | | |
| 1 | 51 | கடை எண் 1 | திரு.பாலகிருஷ்ணன் | 6236 | 935 | 7171 |
| 2 | 54 | கடை எண் 4 | திரு.ரத்தினவேலு | 3704 | 556 | 4260 |
| 3 | 57 | கடை எண் 7 | திரு.விஜயபாண்டி | 4094 | 614 | 4708 |
| 4 | 58 | கடை எண் 8 | திரு.மிதுன்கண்ணன் | 4789 | 718 | 5507 |
| 5 | 59 | கடை எண் 9 | திரு.ரவிகணேஷ் | 4789 | 718 | 5507 |
| 6 | 60 | கடை எண் 10 | திரு.ரவிகணேஷ் | 4789 | 718 | 5507 |
| 7 | 61 | கடை எண் 11 | திரு.ரபீக்மைதீன் | 4789 | 718 | 5507 |
| 8 | 62 | கடை எண் 12 | திரு.ரபீக்மைதீன் | 4789 | 718 | 5507 |
| 9 | 65 | கடை எண் 15 | திரு.சந்திரகுமாா் | 4789 | 718 | 5507 |
| 10 | 66 | கடை எண் 16 | திரு.தாஸ் | 4789 | 718 | 5507 |
| 11 | 67 | கடை எண் 17 | திரு.காஜாமைதீன் | 3998 | 600 | 4598 |
| 12 | 70 | கடை எண் 20 | திருமதி.ராணி | 4315 | 647 | 4962 |
| 13 | 71 | கடை எண் 21 | திரு.பலராமன் | 5778 | 867 | 6645 |
| 14 | 72 | கடை எண் 22 | திருமதி.சுதா | 3551 | 533 | 4084 |
| 15 | 76 | வடபுறம் ஆவின் பாலகம் | நிர்வாக இயக்குநர் | 1374 | 206 | 1580 |
| 16 | 77 | தென்புறம் ஆவின் பாலகம் | நிர்வாக இயக்குநர் | 1294 | 194 | 1488 |
| 17 | 94 | கடை எண் 6 | திரு.சம்சுக்கனி | 4153 | 623 | 4776 |
| 18 | 96 | கடை எண் 2 | திரு.லட்சுமி நாராயணன் | 7699 | 1155 | 8854 |
| 19 | 98 | கடை எண் 23 | திருமதி.பிரேமா | 12412 | 1862 | 14274 |
| பழைய பேருந்து நிலையம் | | | | | | |
| 20 | 79 | கடை எண் 2 | அரசகுமாா் | 3575 | 536 | 4111 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 80 | கடை எண் 3 | அறிவழகன் | 3656 | 548 | 4204 |
| 22 | 81 | கடை எண் 4 | பூமிபாலகன் | 3575 | 536 | 4111 |
| 23 | 82 | கடை எண் 5 | கண்ணன் | 3616 | 542 | 4158 |
| 24 | 83 | கடை எண் 6 | ஜெயவெங்கட்ராமன் | 3616 | 542 | 4158 |
| 25 | 84 | கடை எண் 7 | ராம்ராஜ் | 3616 | 542 | 4158 |
| 26 | 88 | கடை எண் 2 | முத்து | 3616 | 542 | 4158 |
| 27 | 110 | கடை எண் 8 | கஜேந்திரன் | 3656 | 548 | 4204 |
| 28 | 111 | கடை எண் 2 | பொய்யாமொழி | 3616 | 542 | 4158 |
| 29 | 112 | கடை எண் 5 | பாலசுந்தரம் | 3616 | 542 | 4158 |
| அண்ணாசிலை கடைகள் | | | | | | |
| 30 | 105 | கடை எண் 2 | சிவக்குமார் | 745 | 112 | 857 |
| 31 | 103 | கடை எண் 1 | கோவிந்தன் | 1466 | 220 | 1686 |
| திருமேனி மடத்து தெரு கடைகள் | | | | | | |
| 32 | 113 | கடை எண் 1 | தேவரப்பன் | 1659 | 249 | 1908 |
| 33 | 114 | கடை எண் 2 | சந்திரமோகன் | 1659 | 249 | 1908 |
| 01.06.2019 முதல் புதுப்பிக்கபட வேண்டிய கடைகள் | | | | | | |
| 34 | 74 | உணவு விடுதி | திரு.ஜெயபால் | 17940 | 2691 | 20631 |
| 35 | 2013009 | காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 9 | ஜெயகிருணணன் | 1909 | 286 | 2195 |
| 36 | 2013008 | காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 4 | கல்யாணி | 1840 | 276 | 2116 |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க எண் 11271/2018/அ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.667</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் மக்களை கணக்கெடுப்பு பணிக்கு, படிவம் அச்சடித்து பெறுவதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

1. நித்தியாநந்தசிவா மதுரை ரோடு, அருப்புக்கோட்டை (1 எண்ணம் ரூ.5/–) ரூ.1,50,000/–
2. சிட்டி டீரேடர்ஸ் மதுரை ரோடு, அருப்புக்கோட்டை (1 எண்ணம் ரூ.6/–) ரூ.1,80,000/–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நித்தியாநந்தசிவா மதுரை ரோடு, அருப்புக்கோட்டை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.0

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க எண்12357/2019/எச்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.668</u>**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள திடக்கழிவு மேலாண்மை தொடர்பான SWM Policy மற்றும் Action Plan ஐ தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் செய்திட அனுமதியும், அதற்கான செலவீனஙகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண் 2071/2019/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.669</u>**

**பொருள் 12 :** 2019–20ம் நிதியாண்டிற்கு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிப்பொறி பிரிண்டர் லேசர் டோனர்கள், Dotmatrige பிரிண்டர் ரிப்பன்கள், கணினி மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் டோனர்கள் வாங்கிட அதனை Refil செய்திட Compatible Toners வாங்கிடவும் கணினி மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் தொடர்பான இதர உதிரி பாகஙகள் வாங்கிட மேற்படி இயந்திரக்களில் பழுது நீக்கம் செய்து உதிரி பாகஙகள் பொறுத்தி சரிசெய்திட மேலும் A4 சைஸ் பேப்பர்கள் மற்றும் Legal சைஸ் பேப்பர், ஸ்டேசனரி பொருட்கள் வாஙகிட ஆகும் உத்தேச மொத்த செலவினம் ரூ.5.00 (ஐந்து லட்சம்) வரை செலவுகள் செய்ய கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க எண் 2631/2019/பி3

**அலுவலகக்குறிப்பு :–**

கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.670**

**பொருள் 13 :** 2019–20 ம் நிதியாண்டிற்கு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பண மதிப்புள்ள மற்றும் பண மதிப்பில்லாத படிவஙகள், மற்றும் பதிவேடுகள் கணினி ரசீதுகள் பேட்டரிகள், மற்றும் பதிவேடுகள் தபால் கவர்கள் மேலும் அச்சடித்து பெற வேண்டிய இதர இனங்கள் ஆகியவற்றை காரைக்குடி இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சகத்திலிருந்து அச்சடித்து வாங்கிடவும் மேலும் அணைத்து பிரிவுகளுக்கும் தேவையான ஸ்டேசனரி பொருட்கள் மற்றும் A4 சைஸ் பேப்பர் மற்றும் Legal சைஸ் பேப்பர்கள் R–2 புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலையிலிருந்து வாங்கிடவும் உத்தேச செலவினம் ரூ.5.00 (ஐந்து இலட்சம்) வரை செலவுகள் செய்ய கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க எண் 2632/2019/பி3

**அலுவலகக்குறிப்பு :–**

கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.671**

**பொருள் 14 :** அருப்புக்கோட்டை நகராட்சியின் 2019 – 2020 ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் சமர்பிக்கப்படுகிறது.

ந.க எண் 583/2016/பி1

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.672**

**பொருள் 15** **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306 (28A)ன் கீழ் திருத்தியமைக்கப்பட்ட அறிவிக்கை எண்.75 நாள் 21.02.2019ன் படி விருதுநகர் மாவட்ட சிறப்பு வெளியீடு அரசிதழ் எண். 27.10.2017 வரிசை எண். 7, 7(1),7(2),7(3),7(4), மற்றும் அட்டவணை 1 ஐ நீக்கம் செய்து ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306 (28A)ன் கீழ் திருத்தியமைக்கப்பட்ட அறிவிக்கை எண்.75 நாள் 21.02.2019ன் படி விருதுநகர் மாவட்ட சிறப்பு வெளியீடு அரசிதழ் எண். 27.10.2017 வரிசை எண். 7, 7(1),7(2),7(3),7(4), மற்றும் அட்டவணை 1 ல் ஆகிய விதிகள் நீக்கம் செய்யப்பட்டு அதற்குபதிலாக ஒருமுறை பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழஙகுதல் (Supply) கொண்டு செல்லுதல்(Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. (i)**செயலாக்க அதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii)**ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபகர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii)**மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iV)**தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்குஅட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2. **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு:**

I.மொத்தமாக (Whole Sale) சேமித்தல்/வழஙகுதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/ பகிர்ந்தளித்தல்

II.வணிக வளாகஙகள், துணிக்கடைகள் பல்பொருள் அஙகாடிகள்,திரை அரஙகுகள், திருமண மண்டபஙகள், மதுபான கூடஙகள்,தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனஙகள் மற்றும் பெரிய வணிக நிறுவனஙகள்.

III.மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

IV.சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனஙகள்.

3. **இந்த துணைவிதியை மீறினால் செலுத்தும் அபராதம்:–**

இந்த துணை விதிகள் தொடஙகிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகும் இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதிமீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

4. அட்டவணை II.ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை :–**

அருப்புக்கோட்டை நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் அருப்புக்கோட்டை நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6. **தண்டனைகள் விபரம்:–**

## அட்டவணை II

## பிரிவு 306 (28A) ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| I | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழஙகுதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| II | வணிக வளாகஙகள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அஙகாடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனஙகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழிணை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| III | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனஙகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழிணை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| IV | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

ந.க.எண்.907/2017/எச்1

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.673**

(ஒம்) திருமதி.ரா.ஜெகதீஸ்வரி
ஆணையாளர் (பொ)
அருப்புக்கோட்டை நகராட்சி

/உண்மைநகல்/

ஆணையாளர்,
அருப்புக்கோட்டை நகராட்சி